1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு பக்கங்களிலிருந்து நான் யாரையும் அனுமதிக்கப் போவதில்லை. உட்காருங்கள். ஒரு ஒழுங்குப் பிரச்சினையில் எவ்வித விவாதத்தையும் அனுமதிக்க இயலாது. ஒரு பிரச்சினையை விவாதிக்க எத்தனையோ சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. இன்றைக்கு 3 பேர்களுக்கு, ஒழுங்குப் பிரச்சினை எழுப்ப அனுமதித்தேன். திரும்பத் திரும்ப ஒழுங்குப் பிரச்சினை வரும்பொழுதுதான் வேண்டாம் என்று சொன்னேன் என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கவனிக்க வேண்டும். விஷயம் என்னவென்றால், என் அறையிலே வந்து சொல்வதில் ஆட்சேபணை இல்லை. பாயின்ட் ஆப் ஆர்டர் என்று கேட்பதைவிட என்னிடம் தனியாக வந்து கேட்கலாம். முந்தாநாள்கூட என். வி. என். சோமு அவர்கள் ஒரு பிரச்சினை விவாதிக்க அனுமதி வேண்டுமென்று கேட்டுக் கொண்டதின் பேரில், இன்றைக்கு எடுத்துக் கொண்டோம். ரகுமான்கான் அவர்களைப் பேச அனுமதிக்கவில்லையா ? பதில் வந்தால், அனுமதிக்கிறேன். எனக்கு அதிலே என்ன கஷ்டம் இருக்கிறது? (குறுக்கீடு) இந்தப் பிரச்சினை முடிந்துபோய்விட்டது. விளக்கம் வேண்டாம். திரும்பவும் ஏதாவது பிரச்சினை வரும். ஏதாவது யோசனை இருந்தால், என் அறைக்கு வந்து சொல்லுங்கள்.

[முற்பகல் 10-20]

4. கவன ஈர்ப்புகள்

(அ) கீழக்கரை மீனவர்கள் நிலை

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,

'' 8—4—1981 அன்று கீழ்க்கரை மீனவர்கள் மீது நடந்த தாக்குதல் குறித்த''. அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு நிதியமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 8—4—1981-ல் எவ்வித அசம்பாவிதமும் நடைபெற்றதாகத் தெரியவில்லை. ஆனால், கீழக்கரையைச் சார்ந்த திரு. முகமது இப்ராகிம் ஷாவின் மகன் முத்து முனியன் என்பவர் 5—4—1981 நாளன்று இரவு 7-30 மணி சுமாருக்கு மண்டபம் காவல் துறை நிலையத்தில் புகார் மனு ஒன்று கொடுத்து இருக்கிறார். அதில், தன்னை சீனியப்பா தர்கா எனும் இடத்தில் 4—4—1981 அன்று இரவு சுமார் 11·00 மணிக்கு நெடுமரைக்

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

காட்டைச் சேர்ந்த மாணிக்கம், களஞ்சியம் என்ற இருவரும், மற்றும் பெயர் தெரியாத மூவரும் கையாலும், கம்பாலும், அடித்துத் தாக்கியதாக கூறியுள்ளார் என்று அறியப்படுகிறது. இந்தப் புகார் மனுவை மண்டபம் காவல் நிலையத்தில் உள்ள துணை உதவி ஆய்வாளர் விசாரித்தார். பின்னர், முத்து முனியனால் கொடுக்கப்பட்ட புகார், இ. பி. கோ. 323-வது பிரிவின்படி பிடியாணை வேண்டும் குற்றமாக (Non-cognizable offence) இருப்பதால், நடவடிக்கைக்கு அனுமதி வழங்கி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள நீதிமன்றத்திற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார் என்றும் தெரிகிறது. தற்போது அங்கு சகஜ நிலைமை நிலவுவதாகவும் அறியப்படுகிறது.

*திரு. கெ. சிவசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8 ஆம் நாளில் கொடுக்கப்பட்ட இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம், இன்றைக்கு 20 ஆம் தேதி எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. நீண்ட காலதாமதத்திற்கு பின்னாலே இப்படிப்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் எடுத்துக்கொள்ளப் படுவதின் காரணமாக பல விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமையை மாற்றி உடனடியாக அவசரத் தீர்மானங்கள் வரக்கூடிய நேரத்தில், மிக முக்கியமான தீர்மானமாகக் கருதி காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும். கால தாமதத்தின் காரணமாக இன்றைக்கு கிழக்கு இராமநாதபுரத்திலே பல இடங்களில் தீ பிடித்து எரிந்து கொண்டிருக்கின்றன. பல பேர்கள் இறந்திருக்கிறார்கள். அதற்கு எல்லாம் காரணம் காலதாமதம் தான். அந்த நிலைமை வரக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். கீழக்கரைப் பகுதியிலே கொடுக்கப்பட்ட கம்ப்ளெயின்ட்டுகள் உடனடியாக விசாரிக்காததின் காரணமாக இன்றைக்கு மீண்டும் குமுறல் ஏற்பட்டிருக்கிறது. அந்தப் பகுதியில் மீனவர்களுக்கிடையில் அமைதியில்லாத நிலைமை ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. வசதியுள்ளவர்கள் பல ரௌடிகளை கூட்டிக்கொண்டு வந்து திடீர் திடீரென்று தாக்குதல் நடத்துகிறார்கள். அதன் காரணமாக மீனவர்கள் கடலிலே சென்று மீன் பிடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்ல விசைப்படகுகாரர்கள், சாதாரண படகுக்காரர்களை தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். விசைப் படகுகள் போவதின் காரணமாக வலைகள் சின்னாபின்னமாக அழிந்து விடுகின்றன. அதன்காரணமாக அவர்களிடத்தில் அடிக்கடி மோதல் ஏற்படுகின்றன. இதையெல்லாம் ஒழுங்கு படுத்துகிற முறையிலே கொடுக்கப்பட்ட கம்ப்ளெயின்ட்டுகள் உடனடியாக விசாரிப்பதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1981 ஏப்ரல் 20]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறிக்கையிலே குறிப்பிட்டேன். 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 5ஆம் நாள் அன்று இந்த புகார் கொடுக்கப்பட்டது. அதன்மீது இ.பி.கோ. 323 பிரிவின்படி போலீசார் வழக்கு பதிவு செய்து வழக்குமன்றத்திலே நீதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள, நீதி மன்றத்திற்கு அறிக்கை ஒன்றினை அனுப்பியுள்ளார். ஆகவே சட்டப்படி எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆ. விழுப்புரம் வட்டம் அய்யன் கோவில்பட்டு கிராமத்தில் ஏற்பட்ட தீ விபத்து

திரு. கு. பா. பழனியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''விழுப்புரம் வட்டம், அய்யன் கோவில்பட்டு கிராமத்தில் மட்பாண்ட தொழிலாளர் இல்லங்கள் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் அன்று தீ விபத்துக்கு உள்ளானது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர், அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம் அய்யன்கோவில்பட்டு கிராமத்தில் 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 10 ஆம் நாள் அன்று இரவு சுமார் 8 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. 22 குடியிருப்புகள் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டன. தீ விபத்து தற்செயலாய் ஏற்பட்டது. உயிர்ச் சேதமோ, கால்நடைச் சேதமோ இல்லை. மொத்த சேத மதிப்பு சுமார் ரூ. 42,360 முழுதும் பாதிக்கப்பட்ட 22 குடியிருப்புக்களுக்கும் தலா ரூ. 200 வீதம் நிவாரணம் வழங்கப்பட்டது. பாதிக்கப்பட்ட குடும்பம் ஒவ்வொன்றிற்கும் 5 கிலோ அரிசி இலவசமாக வழங்கப்பட்டது. வேட்டி, புடவை வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

திரு கு. பா. பழனியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தீ விபத்தில் உள்ளான அந்த குடும்பங்கள் அனைத்தும், நிலமற்ற ஏழை மட்பாண்ட தொழிலாளர்கள் என்பதாலே அவர்களுடைய தொழில் கருவிகளான சக்கரம், கல், பலகை எல்லாம் அழிந்திருக்கின்றன. இப்போது சித்திரை திருவிழா நாட்களிலே வியாபாரத்திற்காக வைத்திருந்த மட்பாண்டங்